**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண். 4/2023-ன் அசல் வழக்கு எண்.6/2019**

எஸ். பெருமாள் ..மனுதாரர்/வாதி

/எதிர்/

எல். பழனி .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 19.09.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திகேயன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. குணசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 (3) மற்றும் பிரிவு 151ன் கீழ் மகாராஜன் என்பவரை விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் மனுவின் சுருக்கம்**:-

மனுதாரர் இவ்வழக்கில் வாதி. தாவா சொத்திற்கு அருகே எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் மூல ஆவணங்களைவிட அதிகப்படியாக அளவுகள் போடப்பட்டு ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கும் வகையில் மூல ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்பிற்கு ஆவணங்களை பெற்றுக்கொள்ள தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி மனுதாரரை திரும்ப அழைத்து விசாரிக்க உத்தரவிட வேண்டி

மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில் ஆவணங்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அவரது முன் கிரையதாரர் ஏற்படுத்தியுள்ள ஆவணங்களாக உள்ளது. எனவே அந்த ஆவணங்களை உரிய தரப்பினர் மூலம் குறியீடு செய்ய இயலும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் 1971 மற்றும் 1972 ஆண்டு ஆவணங்களாகும். அந்த ஆவணங்களின் தரப்பினர்கள் மனுதாரர் விசாரித்த வகையில் உயிரோடு இருப்பதாக தெரிகிறது. அந்த ஆவணங்கள் மூலம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு 14.08.2006 அன்று கிரையம் செய்த மாராஜன் என்பவர் தற்போது உள்ளார். அந்த ஆவணங்கள் மூலம் அவர் கிரையம் பெற்றதும், அந்த சொத்துக்கள் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அதிகப்படியாக விற்பனை செய்த விவரங்கள் தெளிவாகும். அவரை விசாரிப்பதாக எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எந்தவித கஷ்ட நஷ்டங்களும் இல்லை. எனவே மகாராஜன் என்பவரை மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதியளிக்க வேண்டும், இல்லையேல் மனுதாரருக்கு பெருந்த கஷ்ட நஷ்டம் உண்டாகும். எனவே இம்மனு தாக்கல்.

### 3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:</u>

(i). மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு பொய்யானது, மோசாவிதமானது, சட்டப்படி செல்லத் தக்கதல்ல. மகாராஜன் என்பவருக்கும், இவ்வழக்கின் சொத்திற்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை. இவ்வெதிர்மனுதாரர் மனுதாரர் கிரையம் பெறுவதற்கு முன்னர் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கிரையம் பெற்று வீடு கட்டி அனுபவித்து வருகின்றார். அதே போன்று மனுதாரர்/வாதி கிரையம் பெறுவதற்கு முன்பு, மனுதாரரின் கிரையதாரர்கள் சுமார் 35 ஆண்டுகளாக வீடு கட்டி அனுபவித்து வந்தார்கள். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலேயே 3 மனுக்கள் தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விவரங்களை குறிப்பிட்டு வழக்கை காலம் கடத்தி வருவதை அவர் தாக்கல் செய்துள்ள மனுவின் மூலமாகவே நிரூபித்து வருகிறார். தாவாவில் விசாரணை மேற்கொள்ளாமல் இருக்க வேண்டி இவ்வெதிர்மனுதாரரை அலைகழிப்பதற்காகவே மனுதாரர் பல மனுக்கள் தாக்கல் செய்த வருகிறார். தாவா சொத்திற்கு சம்மந்தமே இல்லாத நபரை விசாரிக்க வேண்டி தாக்கல் செய்துள்ள அம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்/பிரதிவாதி சொத்து கிரைய விவரங்களை மட்டும் வாதியின் தாவாவை நிரூபிக்க மனுதாரர் மகாராஜன் என்பவரை விசாரணை செய்யப்போவதாக தனது மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள விவரம் சட்டப்படி தவறானது.

எனவே இந்த மனு எதிர்மனுதாரர் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு, எதிர்மனுதார்களின் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் இவ்வழக்கில் வாதி என்றும், மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வழக்கினை நிரூபணம் செய்ய வேண்டி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, அந்த ஆவணங்கள் வழக்கு கோப்பிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மனுதாரரை அந்த ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க திரும்ப அழைக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த மனுவில் உரிய தரப்பினர் மூலம் ஆவணம் குறியீடு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், ஒரு மகாராஜன் என்பவரை அந்த ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க அனுமதிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் ஏற்கனவே மனுதாரர் விசாரித்த வகையில் 1971 மற்றும் 1972ல் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு உரிய தரப்பினர்கள் உயிரோடு இருப்பதாக தெரியவில்லை என்றும், அந்த சொத்தை பிரதிவாதிக்கும் விற்பனை செய்துள்ள மகாராஜன் என்பவரை விசாரணை செய்ய அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தனது வழக்கினை நிரூபணம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் தனது கிரைய ஆவணம் மூலமே தனது வழக்கை நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள ஆவணத்தில் சொத்தின் அளவுகள் அதிகப்படியாக உள்ளது என்று காரணம் காட்டி அதனால் மனுதாரருக்கு தாவா சொத்து உரியது என்று கூற இயலாது என்றும், எனவே இந்த மனுவினை அனுமதிக்கக்கூடாது என்றும், தேவையில்லாமல் நீதிமன்றத்தின் கால நேரம் விரையமாகும் என்றும், மனுதாரர், எதிர்மனுதாரரை அலைகழிக்கவே இம்மனு தாக்கல் செய்துள்ளதாவும், எதிர்மனுதாரரின் ஆவணத்தில் ஏற்பட்டுள்ள பிழைகளை வைத்து மனுதாரர் சொத்தில் உரிமை கோர இயலாது என்றும் மனுதாரர் கிரையம் பெற்றுள்ள சொத்து குறித்து நிரூபணம் செய்ய வேண்டியது

மனுதாரரின் பொறுப்பு என்றும், மனுதாராரின் கிரையதாராரையோ அல்லது அவரது வாரிசுகளையோ விசாரணை செய்ய மனுதாரர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

7. **தீர்வு** :-

இருதரப்பு வாதங்கள், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை ஆராய்கையில் இவ்வழக்கில் மகாராஜன் என்பவரை மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்க அனுமதி அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தற்போது விசாரிக்கக்கோரும் சாட்சியானவர் மற்றும் குறியீடு செய்யக்கோரும் ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தேவையற்றது என்றும் எதிர்மனுதாரரை அலைகழிக்கவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை ஆராய்கையில், இவ்வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தனது வழக்கினை நிரூபணம் செய்ய அவசிய ஆவணம் என்று தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் இடைமனு எண் 2/2023ல் காலதாமதத்தை மன்னித்து நீதிமன்ற கோப்பிற்கு பெறப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கிரையதாரர் மகாராஜன் என்பவரை மேற்படி கோப்பிற்கு பெறப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாதங்களின் சாராம்சங்கள் வழக்கு தீர்ப்பின் போது பரிசீலிக்கப்பட வேண்டியது, மேற்படி ஆவணங்கள் தரப்பினர்கள் மனுதாரர் விசாரித்த வரையில் உயிருடன் இல்லை என்றும், எனவே அவர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ள எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் முன் கிரையதாரர் மகாராஜன் என்பவரை இந்த ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க அனுமதிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியை விசாரிக்கக் கோரும் இச்சங்கதிகள் குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் இம்மனு தள்ளுபடி செய்யும் பட்சத்தில் மனுதாரர்/வாதிக்கே பெருத்த

கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். மனுதாரர்/வாதி தரப்பில் விசாரிக்கப்படும் சாட்சியானவரை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வாய்ப்பு உள்ளது. எனவே எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. மாறாக ஒரு முறையான தீர்வு காண வேண்டி இம்மனு அனுமதிக்கப்படுவது அவசியமாகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனை அனைத்தும் வழக்கு தீர்ப்பின்போது பரிசீலிக்கப்பட வேண்டிய ஆட்சேபனையாக உள்ள நிலையில் இம்மனுவிற்கு மேற்படி ஆட்சேபனையை ஏற்க இயலாது. எனவே நீதியின் நலன்பால் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத்தொகையை உபயதரப்பினர்கள் அவரவர்களே ஏற்க வேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:-**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:-**

இல்லை

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.